News p
aper in Ceylon
P. M. G. NO. H. A.
89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞு ஆனி மீ உஎ ௳ (1947 ஜூலை 11 வெள்ளிக்கிழமை) [இல உஅ

## பிரார்த்தனை

ஒப்புனக் கில்லா வொருவனே யடியேன்
உள்ளத்து ளொளிர்கின்ற வொளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

—மணிவாசகர்.

# ஓர் அரசியற் சூதாடி

## ஸ்ரீ அந்தோனிப்பிள்ளைபற்றி சென்னைப் பத்திரிகை

சென்னை ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம் சம்பந்தமாகத சென்னை மாகாணத்திலே இரண்டுவருஷச் சிறைத்தண்டனை அநுபவித்துவரும் இலங்கைச் சமசமாஜி மிஸ்டர் எஸ். ஸி. ஸி. அந்தோனிப்பிள்ளையின் அரசியற்கொள்கைகளையும், அவர் ஆற்றிவந்த செயல்களையும் கண்டித்து, சென்னை "பிரீ இந்தியா" பத்திரிகையில் "குமார்" என்பவர் பின் வருமாறு எழுதுகிறார்:

"ஒரு ஆண்டுகாலத்திலே, இரண்டு வேலைநிறுத்தங்களை ஆரம்பித்து, தொழிலாளர்களைத் தமது அரசியற் சூதாட்டத்திலே விடுகாய்கள்எனஉபயோகித்துவந்தார் அந்தோனிப்பிள்ளை சமாதானம் நிலவவிடாமல் சதா குழப்பம் ஏற்படுத்துவதே அவருடையநோக்கமென்றுபலராற் கூறப்படுகிறது. இவர் ருஷ்யாவின்புரட்சிவீரரான ட்ரொஸ்கியின்கொள்கைகளைப்பரப்பி, எங்கும் புரட்சியுண்டாக்குவதையே லட்சியமாகக் கொண்டவர் என்றும் கூறப்படுகிறது. அவர் கொள்கைகள் எப்படியிருந்தாலும், தொழிலாளரின் நல்வுரிமைகளைச் சென்ற சிலமாதகாலத்துக்குள் சிதறடித்துவிட்டார் என்றுகூறல் மிகையாகாது. எனவே, இவர் சிறையிலிருந்து மீண்டும், இனியும் வேலைநிறுத்தங்கள் தொடக்குவாரானல், அவற்றைப் பொதுஜனங்கள் உதாசினப்படுத்துவர் என்பது நிச்சயம்."

# பகற் கனவு


## பாகிஸ்தான் முதற் சுதந்திரம் அடையுமாம்!

இப்போது பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் டொமினியன் அந்தஸ்து வழங்கப்படவிருக்கிறது. பிரிட்டிஷார் தொடர்புடைய இந்த டொமினியன் அந்தஸ்தை உதறித் தள்ளிவிட்டு பிறைக்கொடியைத் தாங்கி, பாகிஸ்தான் பூரணமான சுயராச்சியத்தை இந்தியாவுக்கு முதல் அடைந்துவிடும்! என்றும்இந்திய முஸ்லிம் லீக்கின்வாய்ப்பேச்சு வீரர் கஸ்னுபர் அலிகான் என்பவர் சென்றவாரம் ஓர்கூட்டத்தில் தம்பட்டம் அடித்தார். "ஹிந்துக்கள் பூரண சுயராச்சியமடைய ஒரு தரத்துக் கிரண்டுதரம் யோசிப்பார்கள். அவர்களுடைய தேசமோ சிறியது ஆனல் எங்கள் முஸ்லிம் சாம்ராஜ்யமோ பாகிஸ்தான், பாரசீகம், ஆப்கானிஸ்தானம், அராபியா, ஈரான், துருக்கி என்னும் பல தேசங்களைக் கொண்டதாகும். எனவே, நாம் எவர்க்கும் அஞ்சாது, எங்கள் மூன்றும் பிறைக் கொடியை "அல்லா"வின் அநுக்கிரகத்தால், ஹிந்துக்கள் சுயராச்சியமடையமுன் பறக்க விடுவோம்" என்று கஸ்னுபர் கூறுகிறார்.

# அன்புநெறி

## அதுதான் சமதர்மம்

இந்தக்காலத்திலே, அரசியல் தலைவர்களாக வருவோர் தாம் ஏழைகளுக் கிரங்குபவர் என்றும், சமதர்மிகள் என்றும், சமசமாஜிகள் என்றும் இவை இரண்டுசாராரிலும் பார்க்கச் சொற்ப வித்தியாசமுடைய "சோஷலிஸம்" என்றும் அபேதவாதக்கொள்கையுடையார்என்றும் பேசிக்கொள்ளுகின்றனர் இப்படியானகொள்கைகளைஎல்லாம் பிரசாரம்செய்வதன்முன் இத்தலைவர்கள் சிந்திக்கவேண்டியது ஒன்றுண்டு. அபேதவாதக்கொள்கைகளைக் கைக்கொண்டு சமூகத்துக்குத் தொண்டாற்ற முன்வருபவர்கள் முதலில் மனச்சுத்தி யுடையவர்களாயிருத்தல்வேண்டும். இரண்டாவது தன்னலமற்ற சேவை செய்பவராயிருத்தல் வேண்டும், இந்தக் கருத்தை



அடிப்படையாகக் கொண்டு, சென்றவாரம் மகாத்மாகாந்தி புது டெல்கியில் நிகழ்ந்த ஓர் கூட்டத்தில் ஓர்சிறந்த பிரசாரணம் செய்தார். அவர் கூறியதாவது:

'மனித சமூகத்துக்கு உண்மையான தன்னலமற்ற சேவை செய்ப

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# முருகன் திருநாமம்

[C. A. வேலாயுதம் B. A.]

இப்பரந்த உலகம் இறைவன் இன்னருளினல் நிகழ்கின்றது என்று மறைசாற்றுகின்றன எல்லாச் சமயங்களும், 'அவன் அருளின்றி ஓர் அணுவும் அசையாது. என்பது பழமொழி. ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் தெய்வத்தைப் பல்வேறு பெயர்களால் வணங்குகின்றனர் கிறிஸ்தவர்கள் தங்கள் தெய்வத்தைப் பிதா என்றும், மகம்மதியர்கள் அல்லாவென்றும் வைணவர்கள் நாராயணன் என்றும் சைவர்கள் சிவன் என்றும் பெயரிட்டு வணங்குகின்றனர். அடியார்க் கெளிய பெருமானுகிய முருகக் கடவுளோ எல்லாச் சமயத்தினரும் வணங்குதற் குரியர் பாலகுமாரசுவாமி திருமாலுக்கு மருமகனுகவும், சிவபெருமானுக்கு குமாரனுகவும இருப்பதினுல் சைவத்திற்கும, வைணவத்திற்கும் வேறுபாடு இல்லை என்பது உறுதியாயிற்று.

முருகு என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருளாகும். ஆதலால் முருகன் என்பவன் மிகவும் அழகுள்ளவன் என்பதாயிற்று. மேலும முருகன் என்பதற்கு இனிமை, ஞானம், ஆனந்தம், மாப்பிள்ளை, பிரணவப் பொருள் என்னும் பல பொருள்கள் கொள்ளலாம். முருகன் இச்சா சக்தியாகிய வள்ளியையும், கிரியா சக்தியாகிய தெய்வயானையையும், ஞான சக்தியாகிய வேலாயுதத்தையும் தன்னகத்தே வைத்துக் கொண்டு தன் அடியார்களுக்கு இனிமையையும், ஞானத்தையும், ஆனந்தத்தையும் அளிக்கின்ருன்.

முருகவேளுக்குப் பல திருநாமங்கள் உள்ளன. உமைச்சேய் கார்த்திகைப் பெண்கள் அறுவரின் முலைப்பாலை அருந்தியதனுல் கார்த்திகேயன் ஆனுன் முத்தமிழ்ப் புலவோன் கங்கை நதியால் கொண்டுவரப்பட்டதால் காங்கேயன் எனப் பேர்பெற்ருன். ஞானசற்குருநாதன சரவணை தீர்த்தத்தில் தாமரை இலைகளில் குழந்தைவடிவாய் இருந்ததினுல் சரவணபவன் என்று துதிக்கப்படுகின்ருன். பார்வதிதேவியார் ஆறு குழந்தைகளையும் ஒன்றாக அணைத்து ஓர் உடலும் ஆறுமுகமும் உண்டாக்கியதால் கந்தன் என்ற பேர்பெற்ருன். பாவலர்க்கெளியோன் கணபதிக்குத் தம்பியாதலால் இளைய பிள்ளையார் எனவும், சிவபெருமான் மூலமாய் பிரமதேவனுக்கு ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதி ஞானேதயம் வரச் செய்தமையால் குருநாதன் எனவும், தேவகுஞ்சரி பாகன் வள்ளியெம்பிராட்டியின் மனதைக் கவர்ந்ததினுல் வள்ளி மணுளன் எனவும், திருமாலுக்கு மருமகன் ஆனதால் மாயோன் மருகன் என்றும், சாமிநாதன் தேவர்களுக்கெல்லாம்தலைமை பூண்டு சூரன் அகங்காரத்தை ஒழித்ததினுல் அமரர் நாயகன் எனவும் கூறுவர்.

முற்றும் துறந்த முனிவர்களுக்கு முனிவர் வேடந்தாங்கி தண்டாயுதபாணியாய்ப் பழநியில் காட்சி அளிக்கின்ருன் ஷண்முகநாதன். எல்லா வல்லமையும் அகமும், புறமும் தூய்மையுமுடையவனுக இருப்பதினுல் சுப்பிரமணியன் என்கிருர்கள். வள்ளி, தெய்வயானை சமேதராய் இருப்பதினுல் குமாரசாமி என்று வணங்குகிருர்கள்.

உலகத்தைப் படைக்கும் கர்த்தாவுக்கு நான்கு முகமும், ஊழிக் கர்த்தாவாகிய சிவபெருமானுக்கு ஐந்து முகமும் இருக்கின்றன ஆனுல்ஞானவேளுக்கு ஆறுமுகங்கள் உள்ளன. சிவபெருமான் வானவர் வேண்டுகோளுக்கிரங்கித் தமது ஐந்துமுகத்தோடு, அதோ முகமும் கொண்டு, ஆறுமுகங்களினின்றும் தீப்பொறி உண்டாக்கினர். ஒவ்வொரு பொறியும் பிறகு ஒவ்வொரு குழந்தையாக அவதரித்தமையால் முருகவேளுக்கு ஆறுமுகங்கள் ஏற்பட்டன. ஆருவது முகமானது உள்நோக்கு முகமாகிய அதோமுகத்தைக் குறிக்கின்றது. சூரியோதயத்தில் காணப்படும் சிவந்த நிறத்திற்கு முருகனையும், அஸ்தமனத்தில் ஏற்படும் மங்கலான நிறத்திற்கு சிவனையும் ஒப்பிடுகின்ருர் திருமூலநாயனுர். மேலும் தன்னையே கதி என்று அடைந்த மெய்யடியார்களுக்கு சேவற்கொடியோன் ஞான சக்தியாகிய வேலாயுதத்தைக்கொண்டு மும்மலங்களையும் நீக்கி ஆறுதல் அளிக்கின்ருன். மயிலேறும் பெருமானின் ஆறுமுகங்களும் ஆறு சமயங்களுக்குப் பிரதிநிதியாய் இருக்கின்றன.

திருப்புகழ் இயற்றிய அருணகிரிநாதர் தமது ஒவ்வொரு பாடலிலும் இறுதியில் பெருமாளே என்று சொல்லி முடிக்கின்ருர். இச் சொல்லானது உலக வழக்கில் நாராயணனைக் குறித்தபோதிலும் நூல் வழக்கில் பெருமான் என்ற பொருளில் பெரிய ஆள் (பெருமை—ஆள்) என்றுதான் பொருளாகும். பாரதப்போரைக்கிருஷ்ண பகவான் சாரதியாய் இருந்து பதினெட்டு நாளில் முடித்தார். தேவநாயகன் அமரர்களுக்குச் சேனுதிபதியாகிச் சூரனேடு ஆறுநாள் போர் புரிந்து தேவர்களைச் சிறையினின்றும் மீட்டார். பிரமதேவனைச் சிறையிலிட்டு தகப்பன்சாமி கொஞ்சநாள் படைக்குந் தொழிலை நடத்தினுர். விசாகப்பெருமாள் மும்மூர்த்திகளுக்கும் உகந்தவனுக விளங்குகின்ருர்.

இவ்வாருகப் பல நாமங்கள் இருந்தபோதிலும் முருகா, முருகா என்று திரிகரண சுத்தியாய் மெய்யுணர்வோடு சேய் தன் தாயினிடத்தில் காட்டும் அன்புபோல பக்திகொண்டு தினமும் துதிப்பாருக்குப் படர்கள் ஒழியும், பந்தனை சிந்தும், அன்பு வளரும், ஆணவம் தளரும், இன்பம் பெருகும். துன்பம் ஒழியும், அறமும், திருவும், அறிவும், ஆற்றலும், வரமும் திவ்விய வாழ்வும் வளரும்,

—லோகோபகாரி.

---

உடுப்பிட்டிக் கோயிற் பற்று வாசிகளால் 1947 ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் உடுப்பிட்டிச் சந்திக் கருகாமையில் இருக்கும் மைதானத்தில் உடுப்பிட்டிக் கூடாகச் சென்ற பஸ் 2 மாத காலமாக ஓடாததைப்பற்றி யோசிக்க ஓர் பகிரங்கக் கூட்டம் கூட்டப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஞு
ஆனிமீ ௨௫ வெள்ளிக்கிழமை

## இது மெய்தானு?

நாவலப்பிட்டி "ஹில்ரூட்" நா. க. என்னுங் கைச்சாத்தோடு ஒரு அபிமானி கொழும்புத் தமிழ்ச் சங்க விஷயமாக எழுதியனுப்பிய கடிதத்தை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம்; அக்கடிதத்தில் எடுத்துக் காட்டப்பட்டமை நிச்சயமாயிருந்தால் அந்நிகழ்ச்சியிற் சில, தமிழருள் எச்சமயத்தவர்கட்கும் தீரா வசையைத் தருவதாகுமல்லவா? குறித்த கடிதர் கொழும்பு ஆங்கில தினசரிப் பத்திரிகைகளுளொன்ருகிய "ஸிலோன் டெயிலி நியூஸ்" என்னும் பத்திரிகையின் (4-7-47) பிரசுரமொன்றில், குறித்த கொழும்புத் தமிழ்ச் சங்கத்தார் மேற்படி "கார்ணிவல்" விஷயமாக வெளியிட்ட விளம்பரத்தைத் தம் கூற்றுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

"கார்ணிவல்" எனப்படும் உண்டாட்டுக் களியாட்டுக் கொண்டாட்டத்தினுற் சனசமூகத்திற்கு, அவர்களுள்ளும் இளமையோடு கூடிய ஆடவர் மகளிர்கட்குப் பெரும் அநர்த்தம் நேருமெனக் கண்டே, பாரத நாட்டி லுள்ளவர்கள் இக்களியாட்டுக் கொண்டாட்டத்தைக் கண்டித்து ஒதுக்கினர்; இந்த இலங்கையிலும பொதுஸ்தாபனமென்றிருப்பவற்றின் பொருட்டுப் பொருளீட்டும் வண்ணம் இடையிடையே நடத்தப்படும் இந்தக் "கார்ணிவல்" கொண்டாட்டத்தினல் பொருள் வருவாயென்ற ஒரு இலாபமன்றிப் பெருங்கேடுகள் விளைவதை நாம் அறிவேம்; வித்தியாசாலையபிவிருத்திக்காகவேனும் வேறு எந்த விஷயமாகவேனும் இந்தக் காணிவற் களியாட்டு மூலமாகப் பொருளீட்டத் துணிதல் அக்கிரமமாகும்; காணிவற் கொண்டாட்டம் இந்நாட்டில் தலையெடுத்தற்கு முந்தியிருந்த "பொருட்காட்சி"க் கொண்டாட்டம் நல்ல முறையி லுள்ளதாகும்; அதனல் அதிக வருவாயில்லையென்று கண்டே இக்காலத்து, மானத்தைப் பொருட்படுத்தாத மக்கள் இக்காணிவற் களியாட்டத்தை நடத்திப் பொருளீட்டத் தலைப்பட்டனரெனலாம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தார் மேற்படி சங்கக் கட்டட நிதியின் பொருட்டு நடத்திய கார்ணிவல் விளம்பரத்திற் காணப்படும் இரண்டு அம்சங்கள், அவை உண்மையில் நடந்திருந்தால், தமிழ் மக்களென்றிருப்பவர் எச்சமயத்தவராக, எவ்வகுப்பினராக அவர்கட்கெல்லாம் தீரா வசையைத் தேடிவிடுமியல்பினவாம். ஒன்று ஐரோப்பிய அநாகரீகக் களியாட்டமாகிய "பால் ரூம் டான்ஸ்" மற்றையது, அந்தக் கூட்டத்திலே சௌந்தரியமான யுவதியை ஆடவர் தேர்ந் தெடுத்துப் பரிசு கொடுப்பதும், அப்படியே அதிரூபலாவணிய முள்ள குமாரனை (வாலிபனை) அக் கூட்டத்திலுள்ள யுவதிகள் தேர்ந்தெடுத்துப் பரிசுபெறச் செய்வதுமாம்; இப்படியான இரு அசங்கதமான காட்சிகளை இலங்கையிலே எச்சாதி மக்கள் எச்சமய மக்கள் நடத்தினுலும் அவமதிக்கப்படுவார்களென்பது நிசம் இங்ஙனமாக மானத்தைத் தம் ஆருயிரைக் காட்டிலும் சிறந்ததாக மதித்து வந்த தமிழ்ச் சாதியாரின் வழித்தோன்றல்களென்றிருக்கும்இக்காலத் தமிழர்கள், தமிழர்களுள்ளும் பெண்பாலார், பெண்பாலாருள்ளும் யௌவத்தோடு கூடிய மகளிர் பெரிய சனக் கூட்டத்திலே "என்னைப் பார், என்னழகைப்பார்',என்று சொல்லிக்கொண்டு ஆடவர்கள் முன்னிலையில், அவர்களுடைய கண்களையும் உள்ளத்தையுங் கவரச்செய்யவேண்டி நிற்பாராணல், இப்படிப்பட்ட பெண்கள் இல்வாழ்க்கைக்கு இம்மையிற் பயன்படுவரா?

எங்கள் பாரதநாட்டில் வாழ்ந்த கற்புடை மகளிரின் "இலக்கணத்தைச் சொல்லுமிடத்து:-

'நாற்குணமும் நாற்படையா
ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா
— வேற்படையும்
வாளுமே கண்ணா வதன
மதிக்குடைக் கீழ்
ஆளுமே பெண்மை யரசு"

என்று சொல்லப்பட் டிருக்கிறதல்லவா? அம் மூதாட்டிகளின் வழித்தோன்றல்களென்று மதிக்கப்படும் இந் நாட்டுப் பெண்களுட் சிலர், "உலக்கை தேய்ந்து உளிப்பிடியான வாறு" இப்பொழுது இப்படியான ஈனச்செயலுக்கும் உடன்பட்டிருந்தால், தமிழ்மக்களெவர்க்கும் அழியாப் பழியாய் முடியுமல்லவா? மேலும் மானத்தை விற்று ஈட்டும் பொருளும் நற்கருமத்திற்குப் பயன் படுமா? "தீவினைவிட் டீட்டல் பொருள்" என்பது பெரியோர் வாக்காகும். இங்கு எடுத்துக் கண்டிக்கப்படும் நிகழ்ச்சி நிசமற்றதாயின், இப் பத்திரிகை வாயிலாக உண்மையைத் தெரிவித்தல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தார் கடனகும்

### திடீர் மரணம்

### தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகரின் பிரிவு

கோப்பாய்த் தொகுதிக்குத் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராக முன்வந்துள்ள ஸ்ரீ பி. ஜீ தம்பியப்பா நேற்றைத்தினம காதகிராப்பிரகாரமாகச் சடுதி மரணம் அடைந்தார். நேற்றைத்தினம் புத்தூரில், தமிழ்க் காங்கிரஸ் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறுமென்று ஏற்பாடாகியிருந்தது. அதற்கெனப் பல ஊர்வலங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. கோப்பாய்ச் சந்தியிலிருந்து ஓர் ஊர்வலம் ஸ்ரீ தம்பியப்பா உட்படப் பல காங்கிரஸ் பிரமுகர்களை அடங்கியதாகப் புத்தூரை நோக்கிச் சென்றது. வழியில் ஸ்ரீ தம்பியப்பா தமது நெஞ்சில் நோகிறது என்று கூறி மயக்கமுற்றார். உடனே அவர் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். எவ்விதமான சிகிச்சையும் செய்தும் பயனளிக்காமல் சிறிது நேரத்தில் தேகவியோகமானர்.

# குறிப்புக்கள்

### எமது உணவுநிலை

சென்றவாரம் நிகழ்ந்த இலங்கை ஐரோப்பியர்சங்கத் தலைவர் இலங்கையின் உணவு விஷயமாகக் கூறியமை அத்தனையும் நிசம். இந்நாட்டு மக்கள சுகஜீவிகளாக வாழ வேண்டுமாளுல் அவர்களுக்குஆரோக்கியமானஉணவு மிகக் குறைந்த செலவிற் கிடைக்கத் தக்கதாகச் செய்யவேண்டும் என்று அவர் கூறியதை இலங்கையின்வருங்கால அரசியல் நிர்வாகஸ்தர் அவதானித்துக்கொள்ளுதல் நலம். சென்ற 16 ஆண்டுகாலமாக இந்நாட்டின் பரிபாலனத்தை மேற்கொண்ட கோஷ்டியினர், மக்களின் உணவு விஷயத்தில் மிகவும் பாராமுகமாக இருந்துவிட்டனர். அதன் பயனுக நாட்டு மக்கள் தம் ஊதியம் முழுவதையும் உணவுப்பொருள்களுக்காக-அதுவும் மிகவும் கீழ்த்தரமான உணவுப்பொருள்களுக்காக-வாரியிறைக்க வேண்டி ஏற்பட்டது. இந்த நிலைமை இனியும் இருக்குமாளுல், இந்நாட்டின் அந்தஸ்துக்கே இழுக்குந்தேடுவதாகும். ஓர்காலத்தில் இந்தஇலங்கை நெல்விளையும் பூமியாகவிருந்தது. இன்று அப்பூமிகள காடாய்க் கிடக்கின்றன அக்காடுகளை அழித்துமீண்டும் அவற்றை நெல்லொழிக்கும் பூமிகளாக்க மிஸ்ரர் சேனநாயக்கா 16 வருஷ காலமாகத் தவறிவிட்டார் "எண்ணெய்ச் செலவன்றிப் பிள்ளை வளர்ச்சியில்லை' என்றுங்கு, மிஸ்ரர் சேனநாயக்காவின் பரிபாலனத்தில் கோடிக்கணக்கான பணம் விவசாய விருத்தியைக் காரணமாக வைத்துக் கொண்டு வீண் பிரயம் செயயப்பட்டதுதான் கண்ட மிச்சம்; நடந்து முடிந்ததைப்பற்றிக் கழிவிரக்கப்பட்டுப் பயனில்லை. இனியாவது நாட்டின் உணவுப்பொருள் விருத்தியில் அரசாங்கம் ஜரூராகஈடுபடுதல்வேண்டும். இங்கொரு திட்டம், அங்கொரு நீர்ப்பாய்ச்சல் வேலை என்று ஆதாரமற்ற திட்டங்களைக் கைவிடுத்து, சாஸ்திரோக்தமான விதத்தில் நாட்டின் உணவுப்பொருள் அபிவிருத்தியில் அரசினர் ஈடுபடுவர் எனக் காத்திருக்கின்றேம்.

### சங்கக்கடைகள்

நீர்கொழும்பில் ஐக்கியசங்க உதவிப் பதிவுக் காரியஸ்தர் சங்கக்கடைகள் விஷயமாகச் சென்றவாரம் கூறிய புத்திமதியை இங்குள்ள சங்கக்கடை நிர்வாகஸ்தர்களுக்கு அப்படியே சமர்ப்பிக்க விரும்புகிறேம். உணவுப் பொருள்களும், வாழ்க்கைக்கு இன்றியமையாத ஏனைய பொருள்களும் தட்டுப்பட்ட காலத்திலே, ஊரவர்கள் சங்கக்கடைகளை, அவற்றில் உள்ள பல நூந விஷயங்களைப் பொருட்படுத்தாமல் அபிமானித்து வந்தனர். ஆனல் இப்போது காலம் மாறிவிட்டது. அரிசி, நெல் என்பவற்றை ஒழிந்த ஏனைய பொருள்கள் யாவும் அபரிமிதமாக இறக்குமதியாகித் தனிவர்த்தகர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த வர்த்தகர்களுக்கு, சங்கக்கடைகளுக்கில்லாத பலவசதிகளும் உண்டு. இவற்றையெல்லாம் சங்கக்கடை நிருவாகிகள் ஏற்கெனவே அவதானித்து, நிலைமைகருத்தக்கவாறு தம் கடைகளை ஆக்கிக்கொள்ளுதல்வேண்டும். வர்த்தகத்துறையில கடன் கொடுத்தலும், அதனை மீண்டு பெறுதலும் ஓர் பிரதானமான அம்சம்; இந்த அம்சம், பல காரணங்களினுல, பல சங்கக்கடைகளில் இப்போது இல்லை. இதன் பயனுக, ஊரவர்கள், தாங்கள் இதுகாறும் அபிமானித்து வந்த சங்கக்கடைகளை விடுத்து, தனி வர்த்தகரின் கடைகளுக்குப்போய் அவர்களை அபிமானித்தால் அது நூதனமாகாது. அதன் பொருட்டு அவர்களைக் குறைகூறவும் முடியாது. சங்கக்கடைநிருவாகிகள், இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்குத் தக்கவாறு தங்கள் அங்கத்தவர்களுக்கும், தக்கவர்கள் எனக் காணும் ஏனையோர்க்கும் கடன்கொடுத்து வாங்கும் வியாபார முறையையும் மேற்கொள்ளுதல் வேண்டும். இல்லையேல், சங்கக்கடைகளின் எதிர்காலம் அவ்வளவு சிறந்ததாக இருக்க மாட்டாது

# உலகம் பலவிதக் கதை

### பேட்டுக்கோழி கூவி விடியுமா?

மோட்டார்வண்டியிற் சென்ற முருகேசன் வேலாயுதன் வீட்டுத் தலைவாசலிற் போய் இறங்கி வேலாயுதனைக் கூப்பிடுதலும், அவன் விழித்தெழுந்து "தம்பி, முருகேசு, இந்த அகாலத்தில் வந்ததென்ன; ஏதும் விசேஷமுண்டோ" என்று கேட்டான்: "வேறொரு விசேஷமுமில்லை, அண்ணை, உங்கள் தங்கைச்சியின் கருமமாகத்தான் இந்த நேரத்தில் அவசரமாய் இங்கு வந்தேன்..." என்று அவன் சொல்லி முடிவதற்கிடையில் "தம்பி, நீ குறைநினைத்தாலுஞ் சரி, அந்தச் சம்பந்தம் ஒருபோதுஞ் சந்தியாது, உந்த மாப்பிள்ளையைக் கல்யாணஞ்செய்துகொண்டு சங்கடப்படுவதைக் காட்டிலும் எங்கள் பிள்ளை நித்திய குமாரியிருக்கச் சித்தமாயிருக்கிறுள்...." என்று வேலாயுதன் சொல்வதற் கிடையில், "இல்லை, அண்ணே, அந்தச் சம்பந்தமென்ருல் இந்த நேரத்தில் நான் ஏன் வருவான்; அதைப்பற்றி ஏன் நினைக்கிறீர்கள்; இது வேறு சம்பந்தம், நல்ல சம்பந்தம், மிகவும் வாய்ப்பானது; ஏதோ தெய்வச் செயலால் வந்து சந்தித்தது" என்று முருகேசன் சொல்லிக்கொண்டு நிற்கும் போது, வேலாயுதன் மனைவியும் அங்கே வந்து, "முற்றத்தில் நிற்பானேன், இங்கே வந்திருந்து பேசலாமே" எனலும், இருவரும் தலைவாசலிற் போயிருந்துகொண்டுபேச, மனைவியுங் கேட்டுக்கொண்டு நின்ருள்; முருகேசன் தான் அந்தநேரத்தில் வந்த நோக்கத்தை ஆதியோடந்தமாக வேலாயுதனுக்கும மனைவிக்குஞ் சொன்னுன்; "நீ சொல்வது சரி தம்பி, ஆனல் ஒரு கல்யாணம் பேசி நிச்சயப்படுத்தி எல்லா ஆயத்தமுஞ் செய்தபிறது குழம்பிவிட்டதென்ருல், குழப்ப மடைந்த மாப்பிள்ளைக்கு வேறொரு பெண்ணையும், பெண்ணுக்கு வேறொரு மாப்பிள்ளையையும் உடனுக்குடன கல்யாணம் செய்துவைக்க எந்தப் பெற்ருரும் பேசுவார்களல்லவா? விடியக் கலியாணம் பிடி வெற்றிலையை என்ருல், அதற்கு உடன்பட முடியுமா? அந்தக் கல்யாணம் குழம்பினுல், பின்னர் யோசித்து ஆறுதலாக அந்த மாப்பிள்ளைக்கு எங்கள் பெண்ணைக் கொடுக்கலாந்தான்; உடனுக்குடன் ஒன்றுஞ் செய்ய முடியாதே, இது என்ன! கன்னியைக் கடையிலே வாங்கலாருமமா? என்னவோ பெண்ணைப் பிறந்தவள, எனக்கொன்றுந் தெரியாது; பேட்

தொடர்ச்சி 5ம்பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதற் பொறுப்பாளி யார்?

## 16 ஆண்டுச் சர்வாதிகாரி

### வகுப்பு வாதம் வளர்ந்த விதம்

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறர் ]

இன்று இலங்கையில் நிகழ்வது சேனனுயக்கா சகாப்தம் என்க டொனேமூர் அரசியற்றிட்டத்தின் பயனுக இலங்கை மக்களுக்குச் சர்வஜன வாக்குரிமை யளிக்கப்பட்டுப் பெயரளவில் ஜனநாயக ஆட்சி நிலவுகின்றபோதிலும், சென்ற 16 வருடங்களாக இந்நாட்டில் நிகழும் அரசியல் நாடகத்தில் மிஸ்ரர் சேனனுயக்காவே கதாநாயகன் வேடந்தாங்கி நடித்திருக்கிறர், 16 வருஷ காலமாக இப்படிக் கதாநாயகன் வேடம் தாங்கி நடித்த மிஸ்ரர் சேனனுயக்காவின் அரசியல் வாழ்க்கையின் கடைசிக்காலம் என்ருகும் என்பது இன்னும் சிலவாரங்களில் நிர்ணயிக்கப்படவிருக்கிறது. நாடகங்களில் வரும் சற்பாத்திரங்கள், தம் கடைசிக் காலத்திற் சீருஞ் சிறப்பும் பெற்று இனிதே வாழ்ந்தார்கள் என்று அநேகமாகக் கதைகள் முடிகின்றன. அதேபோல மிஸ்ரர் சேனனுயக்கா, தமது முதிய வயதில், இலங்கையின் முதற் பிரதம மந்திரியாக, மனச்சாந்தியுடன் தம்வாணுளைக் கழிக்கலாம்; அல்லது நாடகங்களில் வரும் துர்ப்பாத்திரங்கள் அடைபம் கதியையடைந்து, எல்லார்க்கும் பொல்லாராய் அவமானமடைந்து தம் அரசியல் வாழ்க்கையை முடிக்கலாம்; நாடகமே உலக ; நாளை நடப்பதை யார் அறிவார்

○

#### அவர் செய்த சேவை

மிஸ்ரர் சேனனுயக்கா தன சிங்களச் சமூகத்துக்கு அநேகவிதமான நன்மைகளைச் செய்ய முயற்சித்திருக்கிறர் என்பதை மறுப்பதற்கில்லை, இந்த முயற்சிகள் எவ்வளவுதூரம் அநுகூலம் அடைந்தன என்பதை எதிர்காலம்தான் நிர்ணயிக்க வல்லது. உறங்கிக்கிடந்த சிங்கள சமூகத்தை—அரசியல் ஞானம் அற்று இருந்த சிங்கள ஜ தியைச்—கண் விழிக்கச்செய்த பெருமை மற்றெல்லாரிலும் பார்க்க மிஸ்ரர் சேனனுயக்காவுக்கே அதிகம் உரியதெனலாம். ''இந்த இலங்கை எங்களுக்கேயுரியது; எங்கள் சிங்கக்கொடி உலகெலாம் பறக்கவேண்டும்'' என்று சிங்கள மக்கள் இன்று உத்வேகமாக நிற்பதற்கு மூலகாரணர் மிஸ்ரர் சேனனுயக்காவே; ஆதன் பொருட்டு சிங்கள சமூகம் அவர்க்கு என்றென்றும் கடமைப்பட்டாக வேண்டும். ஆனல் இந்தவிதமான அபிமானத்தைச் சிங்கள மக்களிடையே எந்தவிதத்திற் புகுத்தினர் என்னும் விஷயத்தில் அபிப்பிராய பேதம் இருக்கத்தான் செய்கிறது. அரசாங்கத்தில் உள்ள செல்வாக்கைக்கொண்டே, பொதுப் பணத்தைக்கொண்டே இந்த வேலையைச் செய்தார் என்றும் ஓர் சாரார் கூறுவர். மின்னேரித் திட்டம் சிங்களக் குடியானவர்களுக்கே செய்யப்பட்டது. இன்று தென்னிலங்கையில் உள்ள விவசாயப் பட்டாளம் சிங்கள மக்களுக்குப் பிழைப்புக்கொடுப்பதற்காகவு ,அவர்களுக்குச் சுயாபிமானத்தை யூட்டுதற்காகவுமே ஏற்பட்டது என்பதை ஆட்சேபிக்கப் பலர் முன்வரார் என்பது திண்ணம். சுருங்கக் கூறுமிடத்தால், மிஸ்ரர் சேனனுயக்கா தன்னுடைய சொந்தத் தியாகத்தால், தன்னலமற்ற செயல்களினுல் சிங்கள மக்களை முன்னேற்ற எத்தனிக்கவில்லை; ஆற்றிலேபோகும் தண்ணீரை அள்ளிக்கொடுத்தவன்போல, இலங்கைப்பொதுப்பணத்தை வாரியிறைத்துத் தம்சமூகத்தை முன்னேற்ற முயற்சி செய்திருக்கிறர் அதன் விளைவுதான் இன்று இந்தநாட்டில் தோன்றியுள்ள வகுப்புவாதம்

○

#### சிங்கள வகுப்புவாதம்

இந்நாட்டில் இனி வகுப்புவாதத்துக்கு இடமில்லை இலங்கைவாழ் சகல சமூகத்தினரும், சாதியினரும் ஒற்றுமையாக வாழ்வதிலேயே இந்த நாட்டின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது என்பதே எனது அபிப்பிராயம். ஆனல், இந்த இலங்கையில் வகுப்புவாதம் என்னும் கொடிய பைசாசம் இந்த நிமிஷத்திலும் உலவிவருகிறது என்பதை மறுப்பதற்கில்லை. நாட்டிலே வகுப்புவாதம் இல்லை; இலங்கை மக்கள் யாவரும் தேனும் பாலும் போலவே ஒழுகுகின்றனர் என்று யாரும் கூறினல், அது ஓர் ஏமாற்று வித்தை என்றே கூறவேண்டும்: ''இது எங்கள் நாடு; மற்றவர்களுக்கு இங்கே வேலையில்லை'' என்ற ஓர் அபிப்பிராயம் சிங்களப் பொதுஜனங்கள் மத்தியிலும், ''சிங்கள ராச்சியம் வந்துவிட்டது; இனி நாம் நசுக்கப்படவேண்டியதுதான். அதற்குமுன், ஏதாவது தற்பாதுகாப்புக்கான கருமத்தை நாம் ஆற்றவேண்டும்'' என்ற எண்ணம் சிறுபான்மையினர்—அவர்களிலும் விசேஷமாகத் தமிழ்மக்கள்மனத்திலும் உதித்திருப்பதை எவரும் மறுக்கமுடியாது: ஆனல் இதிலுள்ள வேடிக்கையென்னவென்றால், இத்தகைய மனோபாவம் கொள்ளும் பெரும்பான்மை வகுப்பினராய சிங்கள மக்கள் வகுப்புவாதிகள் எனப் பெயரெடுக்காமல், சிறுபான்மையினராகிய தமிழ்மக்களே வகுப்புவாதிகள் எனப் பேர்கட்டிக்கொண்டமையேயாகுக. வகுப்புவாதத்தின் மூலகாரணம் சந்தேகம்; பெரும்பான்மைச் சமூகத்தினரின் தலைவர்கள் தங்கள் தாராள மனப்பான்மையினுல், பரந்தநோக்கத்தால் சிறுபான்மையினர்க்கு நம்பிக்கையை யூட்டவேண்டும்; ஆனல் இந்த நல்ல ஞானம இலங்கைவாழ் சிங்களத் தலைவர்களுக்கு — விசேஷமாக சேனனுயக்காக் கோஷ்டியினர்க்கு இதுவரை ஏற்படவில்லை; தேசியக் கொடி அமைப்பு விஷயத்தில், சேனனுயக்காக கோஷ்டியினர் இதுவரை தமிழ்மக்களின் அபிப்பிராயத்தைக்கேட்க நினைக்கவில்லை; இந்த இலங்கையில் சிங்களரின் சொந்தக் கொடியாகிய சிங்கக்கொடியைத் தேசியக்கொடியாக்க முனைந்திருப்பது. தமிழ்மக்களின் சுயமரியாதையைப் பங்கப்படுத்தவுள்ள ஓர் விஷயம் என்றே நான் கருதுகிறேன். கதிர்காமவிஷயமாக, நாளிதுவரை சிங்கள மந்திரிமார் கைக்கொள்ளும்முறையும் மிகவும் வெட்கக்கேடானது.

○

#### யார் வகுப்புவாதிகள்?

இன்று ஸ்ரீ ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை வகுப்புவாதியென்று சேனனுயக்கா கூறுகிறர். ஜீ ஜீ வகுப்புவாதியா, அல்லது தேசீயவாதியா என்பதை நாம் இப்போது ஆராய வரவில்லை. ஆனல்மிஸ்ரர் சேனனுயக்கா கூறுகிறபடி அவர் ஓர் வகுப்புவாதியானல், அப்படி அவரைவகுப்புவாதியாக்கியது யார்? தீவிர முற்போக்குடைய யாழ்ப்பாணம் வாலிப மகாநாட்டாரின் சார்பாக ஓர்காலத்தில் தேர்தலில் நின்ற ஜீ. ஜீ ,இன்று வகுப்புவாதிகள் தலைவராக இருந்தால், அதற்குச்சிருஷ்டிகர்த்தா மிஸ்ரர் சேனனுயக்காதான். டொனேமூர் அரசியல் அங்குரார்ப்பணம் செய்யப்படமுன் சிங்களர்க்கெனவிருந்த பத்திரிகைகளைக் கைவிரலினுல் எண்ணிவிடலாம். ஆனல் டொனேமூர் அரசியல் அங்குரார்ப்பணமானதும், சர்வஜன வாக்குரிமையின் பயனுக பாமர சிங்கள மக்களின் வாக்குச்சம்மதத்தைப் பெற்று, அரசியலில் அரிச்சுவடிதானும் அறியாத பிரகஸ்பதிகள் பலர் சிங்கள நாடுகளிலிருந்து அரசாங்க சபைக்குச் சென்றனர். பலபத்திரிகைகளை ஸ்தாபித்தனர். விஷம் பொதிந்த கட்டுரைகள் அப்பத்திரிகைகளில வெளிவந்தன. பட்டையில் தாவி, பின் மரத்தில் தாவி, பின் உள்வைரத்தில் தாவிய புழுப்போல, ஆரம்பத்தில் மலையாளிகள்மீது, பின் இந்தியர்மீது, ஈற்றில் இலங்கைத் தமிழ்மக்கள்மீது இப்பத்திரிகைகள் யோக்கியமற்ற முறையில். கேவலமானவகையில் தாவிவருகின்றன. சேனநாயக்காக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களிற் பலர் இப்பத்திரிகைகளை நடத்துகிறர்கள். இன்று இலங்கையில் வகுப்புவாதம் மிகுந்திருப்பதற்கு இப்பத்திரிகைகளே மூலகாரணம். மிஸ்ரர் சேனனுயக்கா உண்மையான தேசாபிமானியானல், தமிழ்மக்கள் விஷயமாக அவர் தேனொழுகப் பேசும் வார்த்தைகள் மனப்பூர்வமானவையானல், முதலில் தமிழ்மக்களை நிந்திக்கும் இப்பத்திரிகைகளை ஒழித்தல்வேண்டும்.

○

#### சமதர்மத்தின் சிருஷ்டிகர்த்தா

வகுப்புவாதம் என்னும் நஞ்சுக்கு மிஸ்ரர் சேனனுயக்கா எப்படி மூலகாரணரோ அப்படியே இந்த இலங்கையில் சமதர்மம் என்னும்கொடியகொள்கைக்கு அவர்தான் மூலகாரணராவர், ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்ளுவோம. வெளி நாடுகளிலிருந்து இங்கே இறக்குமதி செய்யும் அரிசியைக் கொத்து ஒன்று 56 சதவீதம் மிஸ்ரர்சேனனுயக்காவின் அரசாங்கம் பெறுகிறது. அதாவது ஒருபுசல் அரிசிக்கு (56×32 17 ரூபா 92 சதம் கொடுக்கிறது அதாவது நெல் விகிதமாகப் பார்த்தால் ஒரு புசல் நெல்லுக்கு ஏறக்குறைய 9 ரூபா முடிகிறது: இந்த 9 ரூபாவில் 9 சதம் தானும் இந்த நாட்டில் தங்காது. பிறேசிலுக்கும், எகிப்துக்கும் பர்மாவுக்கும் போகிறது என்னவிலையானுலும் பாதகமில்லை அரிசியைக் கொண்டுவாருங்கள் என்று சேனனுயக்கா அந்நிய நாடுகளுக்கு ஓலம் போடுகிறர். ஆனல் அதே மிஸ்ரர் சேனனுயக்கா, உள்ளூரில் விளையும் நெல்லுக்கு புசல் ஒன்றுக்கு 6 ரூபாவுக்குமேற் கொடுக்க மறுக்கின்றர். புசல் ஒன்று 10 ரூபாவாக, அல்லது 9 ரூபாவாகத்தானும் இங்கே அரசாங்கம் வாங்குவதாகவிருந்தால், விவசாயிகள் ஓர்போதும் கஷ்டப்படமாட்டார்கள்; விளையும் நெல் முழுவதையும் அரசாங்கத்துக்கே கொடுக்க, நாம் அந்நியரை எதிர்பாராது இருக்கலாகும். இலங்கையில் எமக்கு வேண்டிய நெல்லை நாம் விளைவிக்கமுடியும். இப்போதும் விளைந்துதான் வருகிறது. ஆனல் அது ''பிளாக் மார்க்கற்''றுக்குப் போகிறது. அதன்பயனுக ஏழைமக்கள் கஷ்டப்படுகிறர்கள் அக்கஷ்ட நிலையைச் சமதர்மிகள் மக்குக் சாதகமாக்கிக் கொள்கின்றனர். எனவே, சமதர்மம் ஓங்குதற்கும் மூலகாரணர் மிஸரர் சேனனுயக்காதான் என்பதே எனது அபிப்பிராயம்.

## ருஷிய-இந்தியத் தொடர்பு

### நேரு மொஸ்கோவுக்கு விஜயம் செய்யலாம்

லண்டனில் ருஷிய இராஜரீகத் தூதராக இருந்த ஐவன் மெயிஸ்கி என்பவர் இந்தியாவுக்கு ருஷிய இராஜரீகத் தூதுவராக நியமிக்கப்பட்டிருப்பதும், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி ருஷியாவில் இராஜரீகத் தூதுவராக நியமிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டுபேரும் முறையே ருஷியாவிலும், இந்தியாவிலும் மிகப் பிரபலயம் வாய்ந்த சிறந்த அரசியல் வாதிகளாவர். இரண்டாந்தர இராஜதந்திரிகளை விடுத்து, இப்படி முதல்தரமான சிறந்தவர்களை இராஜரீகத் தூதுவராக ருஷியாவும், இந்தியாவும் மாற்றியிருப்பது கூர்ந்து அவதானிக்கவேண்டிய ஓர் விஷயமாகும் இவ்விஷயமாக ''பீப்பிள்'' என்னும் ஆங்கிலப் பத்திரிகை எழுதுவதும் நோக்கற்பாலது: அது பின்வருமாறு கூறுகிறது:

''ருஷியாவின் நட்பையும் அநுதாபத்தையும் பெற இந்தியக் காங்கிரஸ் பெரிதும் விழைகிறது. பண்டிதர் ஜவஹர்லால் நேருவே கூடிய சீக்கிரம் ருஷியத் தலைநகராகிய மொஸகோவிற்கு விஜயம்செய்து, ருஷியச் சர்வாதிகாரியான ஸ்ராலின் முதலாம் பிரமுகர்களைக் கண்டு, பாகிஸ்தான் என்னும் ஈட்டியின் முனையை மழுப்ப முயற்சி செய்வார்.

''பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானுடன் சேர்ந்து, அதன் மூலமாக மத்திய கிழக்கில உள்ள முஸ்லீம் நாடுகளுடன் இணைந்தால், இந்தியாவை ஒரு சமயம்-அவை தாக்கக்கூடும் என்ற எண்ணம் இந்தியக் காங்கிரஸ்வாதிகளுக்கிடையே உண்டு. பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் ஒன்றுசேராமற் செய்யவே பண்டிதர்நேரு மொஸ்கோவுக்கு விஜயம் செய்வார்.''

## சுதந்திர பட்டாணிஸ்தானம்

### எல்லைப்புறத்தில் இன்றுள்ள பிரச்சினை



கபார்கான்

வடமேற்கெல்லைப்புற மாகாணத்தில், அம் மாகாண மக்கள் பாகிஸ்தானுடன் சேர்வதா அல்லது இந்தியச் சமஷ்டியுடன்தான் சேர்வதா என்பது பற்றிய வாக்கெடுப்பு சென்ற ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகிவிட்டது. வருகிற 17ந் திகதிவரை அவ்வாக்கெடுப்பு நிகழும், எல்லைப்புறக் குதாய்கித்மத்கார்ப் படையினரும், காங்கிரசும், இவ்வாக்கெடுப்பிற் பங்குபற்ற மறுத்துவிட்டனர். எனவே, எல்லைப்புற மாகாணம் பாகிஸ்தானுடனேயே சேரும் என்று எதிர்பார்க்கலாகும். ஆனல் இவ்வளவுடன் வடமேற்கெல்லைப்புற மாகாணத்தின் பிரச்சினை தீர்ந்து விடுமா?

எல்லைப்புற மாகாணத்தின் விஸ்தீரணம் 14263 சதுரமைல்கள். அதன் ஜனத்தொகை 3,038,067 அதாவது இலங்கையின் குடிசன தொகையிலும் பார்க்க அரைப்பங்கு. இந்த ஜனத்தொகையில் முஸ்லீம்கள் 91. 71 விகிதமும் ஹிந்துக்கள் 5-94 விகிதமுமாக இருக்கிறர்கள். இங்கே வசிக்கும் மக்கள் சமயமளவில் முஸ்லீம்களாயிருந்தபோதிலும், அவர்களுக்கும் ஏனைய இந்திய முஸ்லீம்களுக்கும் எவ்வகையான தொடர்பும் இல்லை. பட்டாணியராகிய இவர்களுக்கும், வடக்கேயுள்ள அப்கான் ஜாதியினர்க்கும்தான் சகலவிதங்களிலும் நெருங்கிய தொடர்பு உண்டு என்க.

எல்லைப்புறம் இந்தியாவுக்கும், அப்கானிஸ்தானுக்கும் இடையே இருப்பதால், ஓர் கேந்திரஸதானமாக விளங்குகின்றது. ஆப்கானிஸதானமோ, அல்லது அதன் ஆதரவைப் பெற்றுள்ள இன்னேர்நாடோ இந்தியாவின்மீது படையெடுக்க வேண்டுமானல், அது இந்த எல்லைப்புறம் வழியாகவே வரவேண்டும். இந்தக் காரணத்தை வைத்துக்கொண்டுதான் பிரிட்டிஷார் இதுவரை எல்லைப்புற மாகாணத்தை மிகவும் பந்தோபஸதுடன் பாதுகாத்து வந்தனர்.

எல்லைப்புறம் இன்று, இந்தியாவிலே, சென்னை, பம்பாய் முதலிய மாகாணங்களைப்போன்ற ஓர் அந்தஸதை இன்று வகித்திருக்கிறது. ஆனல் 1935ம் ஆண்டுவரை அது தனி மாகாணமாக இருக்கவில்லை. பாஞ்சாலத்துடன் சேர்ந்த ஓர் பாகமாக இருந்தது. எல்லைப்புறத்துக்கும், இந்தியாவில் உள்ள மற்ற மாகாணங்கள்போன்ற அந்தஸது அளிக்கவேண்டுமென்று முதன் முதற் கிளர்ச்சி செய்தவர்கள் கான் அப்துல் கபார்கானும், அவருடைய தமையனாகிய டக்டர் கான்சாகிபுமாகும். இந்த இரண்டு சகோதரரும், பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்துக் கெதிராகச் செய்த போராட்டங்கள் ஒன்றிரண்டல்ல. அப்படியான போராட்டகாலத்திலே, கான்சகோதரர்கள், ஜின்னுவின் உதவியையும், முஸலிம்லீக்கின் உதவியையும் நாடினர். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய தாஸர்களாயிருந்த ஜின்னுவும், லீக்கர்களும், கான் சகோதரர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, அவர்கள் வேறு உதவியை நாடவேண்டியதாயிற்று. அவர்கள் மகாத்மாவின் உதவியையும், காங்கிரசின் உதவியையும் கேட்டனர். பட்டாணிய மக்களின் நெருக்கடியான காலத்திலே உடுக்கையிழந்தான் கைபோலக் காங்கிரஸ உதவி செய்தது. வீரப் பட்டாணியரும், கான்சகோதரர்கள் தலைமையில் காங்கிரசுடன் தோளோடு தோள் சேர்ந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் போராட்டத்தில் பட்டாணிய வீரர் செய்த தியாகங்களோ அனந்தம்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர பட்டாணிஸ்தானம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு ஆண்டுக்குமுன் நிகழ்ந்த பொதுத் தேர்தலில், பட்டாணியர் பாகிஸதானுடன் சேர்வதா, அல்லது ஒரே இந்தியச் சமஷ்டியிற் சேர்வதா என்ற பிரச்சினையின் பேரில் போட்டி எற்பட்டு, இந்தியச் சமஷ்டியிற் சேரவேண்டுமென்ற காங்கிரஸ் கட்சியே பெரிய வெற்றியை ஈட்டியது. அதன் பயனுக, டக்ரர் கான்சாகிப், இன்று எல்லேப்புறப் பிரதமராக இருந்து வருகிறார்.

திபாகம் என்பதையறியாது, மற்றவர்கள் உழைப்பினுல் போக பாக்கியங்களை அநுபவிக்கும் ஜின்னுவுக்கும் அவர்தம் லீக்கர்க்கும் டக்ரர் கான்சாகிப் எல்லேப் புறத்தில் பிரதமராக விருப்பதும், அம் மாகாணம் பாகிஸ்தானுடன் சேர மறுப்பதும் பெரிய வயிற்றெரிச்சலைக் கொடுத்தது. காங்கிரஸ் மந்திரிசபையைக் கவிழ்ப்பதற்கு அவரும் அவர் கூட்டாளிகளும், எல்லேப்புறத் தேசாதிபதி கரோவுடன் சேர்ந்து பலவிதமான தகிடுதத்தங்களை ஆற்றினர். இந்த நிலைமையில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கமும் அவர்களுடன் சேர்ந்து, இந்தியாவைத் துண்டாடி, பாஞ்சாலத்தின் ஓர் பகுதியைப் பாகிஸ்தானுக்கு அளித்தது. ஒரே இந்தியாவில் எல்லேப்புறமும் சேர்ந்து இருக்கவேண்டுமென்று பெரும் போரிட்ட கான் சகோதரர்கள் நிலைமையை உணர்ந்தனர். பாஞ்சாலம் பிரிக்கப்பட்டதால், எல்லேப்புறத்துக்கும் இந்தியாவுக்குமிடையே தொடர்பு அற்றுவிடும். ஆகவே இந்தியாவுடன் அது இனியும் இணைந்திருக்கமுடியாது. ஆனல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின வாலில் தொங்க முனைந்துள்ள பாகிஸ்தானுடன் சேரவும் வீர பட்டாணியர்க்கு மனம் வரவில்லை. இருந்தபோதிலும், மகாத்மாகாந்தியின் வேண்டுகோளின பேரில், கான் அப்துல் கபார்கான், ஜின்னுவிடம் சென்று, இப்போது ஏற்பட்டுள்ள நிலையில், எல்லேப்புறம் பாகிஸ்தானுடன் சேருவதானுல், சில நிபந்தனைகள் இருக்க வேண்டுமென்று கேட்டார். முதலாவது பாகிஸ்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வாலில் தொங்கி நிற்காமல் பூரண சுதந்திரப் பிரகடனம் செய்யவேண்டும். இரண்டாவது எல்லேப்புற மக்களுக்கு, மாகாணப் பரிபாலன விஷயத்தில் பூரண அதிகாரம் இருக்கவேண்டும். எல்லேப்புற மக்களுடைய நாட்டிலே பஞ்சாபியர் புகுந்து அதன் செல்வத்தைச் சூறையாடாம விருப்பதற்காகவே இந்த இரண்டாம் நிபந்தனையை கபார்கான் விதித்தார். மூன்ருவது, பாகிஸதான் அரசியல் நிர்மாணத்தில் பிடிக்கவில்லை எனக் கண்டால், அதனைவிட்டு நீங்கிச் சுயராச்சியம் ஸதாபிக்க எல்லேப்புறத்துக்கு உரிமைவேண்டும் என்று இன்னோரன்ன நிபந்தனைகளை கான் அப்துல்கபார்கான் விதித்தார். இவற்றுக்கு ஜின்னு இணங்கவில்லை. எனவே, கான் சகோதரர்கள் இப்போது நிகழும் வாக்கெடுப்பிற் பங்குபற்ற மறுத்து, பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் சேராத ஓர் சுதந்திர பட்டாணிஸ்தானத்தை அமைக்க ஜரூராகக் கருமம் ஆற்றி வருகிருர்கள். இப்போது நிகழும் வாக்கெடுப்பின்மூலம், ஜின்னு வெற்றியடைவர். ஆனல் அந்த வெற்றி நிரந்தரமானதல்ல என்பது மாத்திரம் நிச்சயம். பட்டாணியர் ஜின்னுவுக்கும் அவருடைய ஜெமீந்தார்களுக்கும் ஓர்போதும் அடங்கி வாழமாட்டார்கள். ஆகவே கான் அப்துல் கபார்கான் இப்போது ஆரம்பித்துள்ள இயக்கம் கூடிய சீக்கிரத்தில் வெற்றி பெறப் பரிபூரண சுதந்திரமுடைய ஓர் பட்டாணிஸ்தானம் உருவாகும் என்பது நிச்சயம்.


## விளம்பரம்

கிளிநொச்சிக் கலனிக் குடியேற்றத்தில் வீடுகள் கட்டும் இடங்களில் ஏறக்குறைய 6000 புசல் குளைச் சுண்ணும்பு கொடுப்பதற்கு 1947-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ந் திகதி 12 மணி வரைக்கும், கொழும்புத் திறைச்சேரியில் றெண்டர் போட் சேர்மன் அவர்கள் றெண்டர் ஏற்றுக்கொள்வார்கள். றெண்டர் ரூபாய் 100 பணங்கட்டி வடமாகாண ஏஜண்டரிடம், 26-7.1947 க்கு முன், பெற்றுக் கொண்ட போம்களில் எழுதப்படவேண்டும். மறு விபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

G 61 8, 11' 15-7-47


## கடன் கொடுங்கள்

### சங்கக் கடைகளுக்கு வேண்டுகோள்

காலம் மாறிவிட்டது. யுத்தகாலத்தில் இருந்த நிலைமை இப்போதில்லை தனி வியாபாரிகளின் போட்டி பலமாக வந்துவிட்டது. ஆகவே, சங்கக் கடைகள் இனியும் உரக்க வியாபார முறையைப் பின்பற்ருமல், கடன் கொடுத்து வாடிக்கைக்காரர்களை இழக்காமலிருத்தல்வேண்டும் என்று நீர் கொழும்பில் நிகழ்ந்த ஐக்கியசங்கக் கூட்டம் ஒன்றில் உதவிப் பதிவுகாரியஸ்தர் மிஸ்ரர் டி. டபிள்யூ விஜயசேகரா கூறினர்.

கடன் கொடுத்து வாங்கினுல்தான் பொதுஜனங்கள் மேலும்சங்கக்கடைகளை அபிமானிக்கமுடியும் என அவர் தெரிவித்தார்.

## மூன்றுமாதம் !

ரத்மலானையில், தென் இலங்கை பஸ்கம்பெனித் தொழிலாளரை வேலைக்குப் போகவேண்டாம் என்று சட்டவிரோதமாகத் தடுத்தார் என்று கொழும்பு நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்ட சமசமாஜிகள் தலைவர் மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன குற்றவாளியெனக் காணப்பட்டு மூன்றுமாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இத்தீர்ப்புக்குவிரோதமாக மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன உயர்தர நீதிமன்றத்துக்கு மநுச்செய்வாரென த்தெரிகிறது.

## நிரபராதி

காலி மின்சார நிலையத்துட் புகுந்து அங்கிருந்த தொழிலாளர் சிலரை பலாத்காரம் பிரயோகித்து வேலைநிறுத்தம் செய்யும்படி தூண்டினர் என்று அரசாங்க சபை அங்கத்தவர் மிஸரர் டபிள்யூ தகநாயக்கா காலி நீதிஸதலத்தில் குற்றஞ் சாட்டப்பட டிருந்தார். விசாரணையின் பின், அவர் நிரபராதியென விடுதலையாக்கப்பட்டார்,

## சிதம்பரம் ஆனி ரதோற்சவம்

சென்ற மார்கழி மாச உற்சவ காலத்திலே சிதம்பர தலத்திற் பெருமழை காரணமாகத் தேர்த் திருவிழா நடவாமையைப் பலர் அறிவர்; இந்த ஆனிமகோற்சவ காலத்திலும் பெருமழை காரணமாகச் சிதம்பரம் தேர் இழுக்க முடியாமல் உற்சவம் தடைப்பட்ட தெனச் சிதம்பர யாத்திரை சென்று மீண்டுவந்த யாழ்ப்பாணத்தவ ரொருவர் தெரிவிக்கின்றர். தேருற்சவ மிரண்டும் இங்ஙனம் தடைப்பட்டமைக்குக் காரணம் பலரறிந்துள்ள இரகசிய மெனவும், பொன்னம்பலவன் திருவுளக் கிடக்கையை யாரறிவா ரென்றும் அந்த அன்பர் கவலையோடுஞ் சொல்லினர்.


## தேவை

சகல விதமான நகை வேலைகளிலுந் தேர்ச்சி பெற்ற பத்தர்மார்கள் மாதச் சம்பளமாகவோ கம்மிஷனகவோ வேலை செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள் தங்கள் மூக்கிய அனுபவமான வேலைகளைப்பற்றிய தகவல்களுடன்எழுதவும். 45 வயசுக்கு மேற்பட்டவர்கள் தேவையில்லை. தேவைப்பட்டவர்களுக்கு வருவதற்குரிய பேமிற் அனுப்பலாம்.

நேதாஜி டயமெண்ட் கம்பெனி
162 சுப்போ ரோட்
செண்டுல்
கோலாலம்பூர்.

தந்தி: "நேதாஜி கோலாலம்பூர்"

Mis 77 7-7-47 to 5-8-47.


## திருச்சி ரேடியோ

**சனி யூலை 15**

காலை 7-15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 கும்பகோணம் டி ஆர் கிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 கே நடராசன் பாட்டு 8-30 சித்திரகானம் இசைத்தட்டு 9 முடிவு.

1 கும்பகோணம் டி ஆர் கிருஷணன் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வ கலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2.05 சர்வகலாசாலைக் குறிப்பு 2-15 ஆர் குருமூர்த்தி பாட்டு 2-45 முடிவு.

மாலை 5 ஆர் குருமூர்த்தி பசட்டு 5 40 ஆண்டாள் பாசுர விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவுப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கே நடராசன் பாட்டு 7-15 சந்தர ஆசியா பேச்சு 7-30 தமிழில் செய்திகள் 7-45 த்வாரம் வெங்கடசாமி நாயுடு வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 நூல்ஏணி 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் 9-45 டி பட்டம்மாள் பாட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு

**ஞாயிறு யூலை 13**

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே சங்கரம்பிளளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8–15 நாகஸவர இசை இசைத்தட்டு 8-30 டி ரங்கம்மாள் வீணை 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12-30 காதல் இன்றேல் 12-40 சாத்காலம் 12-45 வெற்றிக்கு வழி நாடகம் 12.55 பார்த்திபன் தவம் 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 டி ஆர் நவநீதம் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு,

மாலை 5 பாலக்காடு கே வி நாராயணசாமி பாட்டு 5-40 தேவாரானே 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 அம்பூர் அம்ருதவல்லி சுந்தரவல்லி பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 பாலக்காடு கே வி நாராயணசாமி பாட்டு 8-30 அம்பூர் அம்ருதவல்லி சுந்தரவல்லி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எம் எம் தண்டபாணி தேசிகர் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஜே எம் அப்துல்கனி விதார் 10 இசைவேளை 10-30 முடிவு.

**திங்கள் யூலை 14**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே ஆர் ராமய்யா நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் அ இ ரோ வித்வான்கள் 8 30 பாரசாலை பி பொன்னம்மாள்பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கோயமுத்தூர் பி ஆர் ராமச்சந்திரராவ் வயலின் 2 தமிழில் செய்திகள் 2.05 கோயமுத்தூர் பி ஆர் ராமச்சந்திரராவ் வயலின் 2 15 கல்வி ஒலிபரப்பு 2–45 முடிவு.

மாலை 5 கே ஆர் ராமய்யா பிள்ளை வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 கோயமுத்தூர் பி ஆர் ராமச்சந்திரராவ் வயலின் 7-30 தமிழில் செய்திகள் 7-45 நான் கண்ட சீமை 8 பாரசாலை பி பொன்னம்மாள் பாட்டு 8-30 நாட்டுப் பாடல்கள் டெல்லி அஞ்சல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி பி ராமகிருஷ்ணன் பாட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

**செவ்வாய் யூலை 15**

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 கல்பகம் நாராயணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய இசை இசைத்தட்டு 8-30 டி கே பக்கிரிசாமிபிள்ளை புல்லாங்குழல் 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே பக்கிரிசாமி பிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 டி கே பக்கிரிசாமி பிள்ளை புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 கல்பகம் நாராயணன் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-15 இலக்கிய வாசகம் 7.30 தமிழில் செய்திகள் 7.46 கே எஸ் வெங்கடராமய்யா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்கள் 9-15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 முசிரி சுப்ரமணிய ஐயர் இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

## செய்தித் திரட்டு

இன்னுஞ் சில மாதங்களில் இந்தியாவுக்கு 65,000 தொன் கோதுமை ஆஸதிரேலியாவிலிருந்து கிடைக்குமாம்.

0 0 0

இப்போது ஜப்பானில் உள்ள இந்தியப்படைகளும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் படைகளும் ஆகஸடு மாதக் கடைசிக்கு முன் அங்கிருந்து நீக்கப்படுமென்று ஓர் செய்தி கூறுகிறது.

0 0 0

பாகிஸ்தானின் கவர்னர் ஜெனரலாக போபால் நவாப், முஸலிம்லீக்கின் சிபாரிசுப்படி நியமிக்கப்படலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது. பட்டியாலா மகாராஜா, கிழக்குப் பாஞ்சாலத்தின் தேசாதிபதியாய் காங்ரெஸின் சிபாரிசுப்படி நியமிக்கப்படலாம் என்று அமிர்தபஜார் பத்திரிகையின் நிருபர் தெரிவிக்கிருர்.

0 0 0

ஏறக்குறைய 6 ஆண்டுகளின் முன். இலங்கைத் தொழிலாளர் பகுதி அதிகாரியாக விருந்த மிஸரர் எப். வீ ஜிம்ஸன் என்பவர் சிங்கப்பூர்த் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

0 0 0

ஸ்ரீஜுத் எம் எஸ். ஆனே இந்தியாவுக்கு மீண்டுவிட்டார். அங்கே அவர் இந்திய அரசியல் நிர்மாணசபையில் அங்கத்துவம் வகிப்பார்.

## விவாகம்

**பஞ்சாட்சரக்குருக்கள்**

**—ஞானலட்சுமியம்மாள்**

வண்மேற்த ஐயனர்கோவிலடி பிரம்மஸ்ரீ. பிச்சுக்குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்களின் புதல்வர் பஞ்சாட்சரக் குருக்களுக்கும், மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ. சா. அப்பாக்குருக்களின் புதல்வி ஞானலட்சுமி யம்மாளுக்கும் சென்ற வெள்ளிக்கிழமை மத்தியானம் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மணமக ளில்லத்திற்றனே விவாகம் இனிது நிறைவேறியது; தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழ்வண்ணம் இறைவனருள் முன்னிற்பதாக.


## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப் பூனகரி-துணுக்காய்ப் பகுதியிலுள்ள முறிகண்டி குளத்திலுள்ள மண்கட்டுயர்த்துதல் முதலிய வேலைகள் செய்வதற்கு, வடமாகாண ஏசண்டரவர்கள் 1947-ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 15-ந் திகதி செவ்வாய்க் கிழமை பகல் 12 மணி வரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார். குறித்த விண்ணப்பப் பத்திரங்களை, ரூபாய் 50(ஐம்பது) கச்சேரியில் கட்டி வடமாகாண ஏசண்டரின் கையொப்பமிடப்பட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமாக - றெண்டர்- 1947-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ந் திகதி பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

மறு விபரங்களை வடமாகாண ஏசண்டரவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

G 62 11, 15-7-47

## ஆங்கிலம்

மூன்று மாசத்தில் ஆங்கிலம் எழுதப் பேசப் பயிற்றிவிடலாம்; ஓய்வுள்ள நேரத்தில் நீரே வீட்டில் படித்துக் கொள்ளலாம். தபால் மூலமாகவே நாங்கள் பயிற்றி வருகிறோம்; மாசவேதனம் ரூபா 2–50.

அற்லஸ் ஹால்
தபாற் பெட்டி இல. 649
கொழும்பு

Std 19 27-5 — 26-8-47


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

டுக்கோழி கூவி விடியப்போவதில்லையென்று ஆண்பிள்ளைகள் தானே சொல்லுவார்கள்: எதனையும் தீர்க்கயோசித்துச் செய்வது புத்தியாகும்" என்று சொன்னாள்.

### "நிதியுங்கணவனும் நேர்படினுந் தத்தம் விதியின் பயனே பயன்"

"அப்படிநினைக்கவேண்டாம்; நான் உங்கள் மகள் விஷயத்திலே கல்யாணத் தரகனென்ற முறையில் நடந்துகொள்ளவில்லை; நீங்கள் அன்றொருநாட் சொன்னபிரகாரம் என் சகோதரி வேறு உங்கள் மகள் வேறென்று நான் நினைத்து நடக்கவில்லை அக்கா, இது நல்ல சம்பந்தம்; இப்படியொரு சம்பந்தம் இந்தப் பெண்ணுக்குக் கிட்டாதென்று சொல்லலாம். நான் சகல விஷயங்களையும் தீர விசாரித்தபின்பே இந்த நேரத்தில் உங்கள வீட்டுக்கு வந்தேன்; கல்யாணம் செய்யவேண்டுமென்று மாப்பிள்ளை பகுதியார் அவசரப்படுவது வேறொன்றற்குமல்ல; நாளை வரும சுபமுகூர்த்தத்தில் அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் நடக்கப்போகிறது; அதனாற்றான் இவர்களும் அதே முகூர்த்தத்தில் இந்த மாப்பிள்ளைக்குங் கல்யாணஞ் செய்துவைக்க வேண்டுமென்று அவசரப்படுகிறார்கள். அவர் அவசரப்பட்டென்ன, இவர் அவசரப்பட்டென்ன, எவர் அவசரப்பட்டாலும் விதியின்படிதான நடப்பது; அறியாமலா, "நிதியுங்கணவனும் நேர்படினுந் தத்தம்-விதியின் பயனேபயன்" என்றுபெரியோர்பாடி வைத்துப்போயினர். அக்கா, நீங்கள் கொண்ட சிந்தனையை விடுங்கள்...." என்று முருகேசன் சொல்லிமுடிப்பதற்கிடையில், வேலாயுதன் தன் மனையாளைப் பார்த்து, "ஏன் அதிகம் பேசுகிறாய்? எதனையும் தம்பி முருகேசு பொறுப்பில் நம்பி விடுவோம; ஆண்டவனருளால் எல்லா மங்கலமுமுண்டாகும்" எனச் சொல்லிப் பின் முருகேசனைப் பார்த்து, "தமபி, பெண்டுகள்மனம் ஒருநிலையில் நில்லாதென்று பெரியோர் சொல்வர்; என் பெண்டாட்டி பேச்சிற் குறையெண்ணாதே; எங்கள் பிள்ளையை உன் அருமையான உடன்பிறப்பென்று மதித்துக் கொண்டு ஆகவேண்டிய கருமத்தைப் பார்க்குதி; நீ எதனைச் செய்யச்சொல்லுகிறாயோ, அதனை நாங்களிரண்டு பேருஞ் செய்யச் சித்தமாகவிருக்கிறோம்; முதற் கடவுள்; இரண்டாவது எல்லாம் உன்பொறுப்பு" என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தான்; "அண்ணே, ஒருபொல்லாப்புமில்லை" என்று சொல்லி அவர்களிருவரிடத்தும் மீண்டு வருவதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டுரதத்திலேறி, சில நிமிஷங்களுள் தன் வீட்டையடைந்தான்; அவன் வரவை மற்றையவர்களுடன் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பெரியவர், அவனைக் கண்டமாத்திரத்தே, "என்ன, தம்பி, காயா? பழமா?" என்று இதமாகக் கேட்க, "ஐயா, முதல் அந்தமுருகேசன்கிருபையிருக்கவேண்டும்; அது இருக்கும் பாது, இந்த முருகேசன் போனால், எந்தக் காயும் பழுக்காமலிருக்க முடியுமா?" என்று துணிவுடன் சொல்ல, கேட்டவர்களெல்லாரும் சந்தோஷமடைந்தார்கள்.

### "கெட்டார் தழையாரோ கேட்டாருகால் நீங்காதோ"

"தம்பீ, முருகேசு மிகவும் சந்தோஷம்; நீர் எங்கள்மரியாதையைக்காத்தீர். நீர் செய்யும் இந்த நன்றியை நாங்கள் சிவனுள்ளளவும் மறக்க மாட்டோம்; நல்லது, இனி பெண் எந்தப்பகுதி; அவர்களுடைய குலங்குடி மரபு குணம் ஒழுக்கமென்ற இவைகளைப்பற்றி நாங்கள் அறியலாந்தானே" என்று அந்தப் பெரியவர் கேட்க. "ஐயா, நீங்கள் கேட்காமல் அறியாமல் வேறு யார் கேட்பது, அறிவது; நான் உங்களையும் அவர்களையும் நன்கறிவேன்; குலங்குடி மரபினால் அவர்கள் உங்களைக்காட்டிலும் எள்ளளவுங் குறைந்தவர்களல்லர்; நல்லாயிருந்தவர்கள் இப்போதுகெட்டுநொந்துபோனார்கள்; இது ஒன்றுதான் உங்களுக்கும் அவர்களுக்குமிடையே உள்ள பேதம்: அவர்களிடத்திற் பெண்ணுக்கென்று கொடுக்க அதிகஞ் சீதனமில்லையென்பதுநிசம்; ஆனால் அந்தப்பெண்ணெனிலோ,— நீங்கள் பேசிக் கல்யாணம் முழம்பப்பெற்ற அந்தப் பெண்ணையும் நான் அறிவேன்—அந்தப் பெண்ணைக்காட்டிலும் இந்தப்பெண் பதின்மடங்கு திடமென்றாலும் தவறாகாது; அதையிட்டு நான் சொல்வதென்னை? நாளைக்கு நீங்கள் நேரிற் காண்பீர்கள் தாமே; கிருகச் சித்திரம், கல்வியறிவு ஒழுக்கம், இன்சொல், கொண்டான் குறிப்பறிந்து நடக்குங் கொள்கை, ஈகை முதலிய சகல இலட்சணங்களும் இந்தப் பெண்ணிடத்து இயற்கையில் அமைந்துள்ளன என்று சொன்னாலும் பிழையாகாது ஐயா, அதிகஞ் சொல்லி ஆவதென்ன? இச்சம்பந்தம் உங்கள் முயற்சியாலும், என் முயற்சியாலும் பொருந்தப்போகின்றதென்றெண்ணாதீர்கள்; திருவருள் வழியே நடக்கிறதென நினைத்துக்கொள்ளுங்கள்; இந்தப் பெண் உங்கள் வீட்டிற் புக, அட்டலட்சுமியுந்தாமே அங்குவந்தடையும்" என்று சொல்லிமுடித்தான் முருகேசன் இப்படிச் சொல்ல, மற்றையவர்களோடு இவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டிருக்த பெரியவர், "தம்பி, எல்லாம் எங்களுக்கு வெகு திருப்தி; வறுமையைப்பற்றிச்சொன்னீர்; அதையிட்டு எங்கட்கு ஒரு குறையுமில்லை: சீதனத்தைப்பற்றிக் காரியமில்லையென்று முந்தியே உம்மிடம் நாங்கள் சொல்லியிருக்கிறோம்; "கெட்டார் தழையாரோ, கேட்டாருகால் நீங்காதோ' என்றல்லவா உலகத்திலே சொல்லுவார்கள்: பணம் ஒருவரை விட்டுப் போனாலும் பின்பு தேடிக்கொள்ளலாம்; வறுமையுஞ் செல்வமும் மாறி மாறி நிகழ்வது உலக இயற்கை; ஆனாற் குலமுங் குணமும் ஒருமுறை பங்கப்பட்டாற் பின்னர் அவற்றை மீட்டலரிது: ஆனதால் அந்த இரண்டுந்தான் எந்தக் குடியிலும் ஆவசியகம் இருக்கவேண்டியவை" என்று சொல்லிப்பின்னரும் அவர், "இனி நாங்கள் கல்யாணத்திற்கு ஆகவேண்டிய ஆயத்தங்களையெல்லாஞ் செய்யலாந்தானே" எனலும், "செய்யலாம்; ஆனாலும், நீங்கள் நாளைக்காலை பெண் வீட்டிற்குப் போய், அவர்களை நேரிற் கண்டு செய்யவேண்டிய ஒழுங்குகளையெல்லாஞ் செய்வதுதான் முறை; வேணுமானால் இங்கு நாளைக் காலை வந்தால் நானும் உங்களுடன் கூடிக்கொண்டு அங்கேவரலாம்" என்றான்; கேட்ட பெரியவரும் மற்றையோரும் "நீர்சொல்வது முழுவதும் நியாயம்; நாங்கள் நாளைக்காலை முதல் இங்கே வருவோம்" என்று சொல்லி முருகேசனிடம விடைபெற்றுப் போயினர்; முருகேசன் புலரிக்காலத்தில் நித்திரைவிட்டெழுந்து வேலாயுதன் வீட்டிற்குப் போய், அங்கே மாப்பிள்ளை பகுதியார் வரவிருக்கிறார்களென்பதைச் சொல்லி, அவர்களை வரவேற்று உபசரிப்பதற்காகிய ஆயத்தங்கள் செய்யவேண்டுமென்பதையும் தெரிவித்துவிட்டு மீண்டான்.

### காத்திரா விவாகம்

சங்கேதப்படி, மாப்பிள்ளை வீட்டுக்காரர் முருகேசனையுங் கூட்டிக்கொண்டு பெண் வீட்டிற்குப் போனார்கள்: வேலாயுதனும் மனைவியும் வந்தவர்களை இயன்றவரையில் நன்கு உபசரித்தார்கள்; மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்த பெண்கள் சிலர் பெண்ணைப்பார்க்க விரும்பியதனால், வேலாயுதன் மனைவி அவர்களை அழைத்துக்கொண்டுபோய்ப் பெண் இருக்கும் அறையில் விடுதலும், பரிமளம் அவர்களை அன்புடன வரவேற்று, இன்சொற் கூறி உபசரித்தாள்: பெண் பார்க்கவந்தபெண்கள் பரிமளத்தைப் பாதாதிகேசம் வரையில் அவதானமாகப் பார்த்தார்கள்; பாராட்டினார்கள்; அவளுடைய இன்சொல்லைக் கேட்டு மெச்சினார்கள்: இதமான வுடாட்டத்தைக் கண்டு உவகைகொண்டார்கள்; "பெண்ணுக்குப் பெண்ணாசைகொள்ளும் பெண் இந்தப் பெண்" என்று பெண் பார்க்க வந்தவளுளொருத்தி மற்றவளுக்குச் மெல்லச் சொல்லி மெச்சினாள்; மாப்பிள்ளைவீட்டிலிருந்து வந்தவர்களெல்லாரும் பெண்வீட்டார் செய்த உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு அவர்களிடம் விடைபெற்று மீண்டார்கள்; ஆனால், முருகேசன் மாத்திரம் அந்த நேரம் அவர்களுடன் மீண்டு செல்லாது வேலாயுதன் வீட்டில் நின்று, கல்யாணத்திற்கு வேண்டிய சில ஆயத்தங்களைச் செய்து, பெண்வீட்டார்க்கு உதவிபுரிந்தான்: மணமகன் பகுதியார் பெண்வீட்டாருக்குப் போதிய பொருளுதவியும் ஆளுதவியுஞ்செய்து கல்யாணத்தை இடாம்பீகமாக நடத்தவேண்டுமென்று தெரிவிக்க வேலாயுதனும்மனைவியும் அதற்கு உடன்பட்டனர்: சகல ஆயத்தங்களும் வெகு துரிதமாக நடைபெற்றன; முருகேசனே பெண் வீட்டில் நின்று ஆகவேண்டிய கருமங்களையெல்லாம நடத்தினான்; பணமுண்டானால் எந்தக் கருமந்தான் விரைவிற் கைகூடாது? குறித்தமுகூர்த்தத்திலே செல்வச் சிரஞ்சீவி வெ. குழந்தைவேற்பிள்ளைக்கும், திருவளர்செல்வி வே. பரிமளத்தம்மாளுக்கும் விவாகம் அக்கினி சாட்சியாக, சபையோர் சாட்சியாக, வேதப்பிராமணர் சாட்சியாக, சந்திரசூரியர் சாட்சியாக இனிது நிறைவேறியது; "பெண்ணுக்கேற்ற மாப்பிள்ளை மாப்பிள்ளைக்கேற்ற தக்க பெண்" என்று அந்த விவாக சோபனத்தில் சமுகந்தந்த சில பெண்கள் பேசினார்கள்; தம்பதிகள் பதினாறு பேறுகளையும் பெற்று இன்புற்று இனிது வாழ்வார்களாக என்று அங்குச் சமுகமாயிருந்த காலங்கண்ட முதியோர் தம்பதிகளை வாழ்த்தினார்கள்; விவாகம் நிறைவேறிய அன்று பிற்பகல் மணமக்களை மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார்கள்; அங்கே பலவகையான கொண்டாட்டங்களும், உபசாரங்களும் நடைபெற்றன; பரிமளம்பெரும்பான்மையும் தன் கணவன் வீட்டிலேயே இருந்தாள்; குழந்தைவேற்பிள்ளையும் தன் உத்தியோகக் கடமையைக் கிரமமாகச் செய்துகொண்டு இல்லறத்தை இனிது நடத்துவாராயினான்.

—வரும்.


## விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியதெருவில், அநுமதிபெற்றுப் பல்வைத்தியம், கண்வைத்தியம் செய்துவரும் நான், பழையபடி இரு வைத்தியங்களையும் தொடங்கி நல்லமுறையில் நடத்திவருகிறேனென்பதையும், கட்பார்வைக்குரிய கண்ணாடி முதலிய பொருள்களையும், செய்கைப்பல், செயற்கைக்கண் முதலிய பொருள்களையும் இப்பொழுது போதிய அளவு தருவித்திருக்கிறேனென்பதையும் இந்த வடமாகாணத்துள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, என்னை அபிமானிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யோசித்தற்குரிய நேரம் நாள்தோறும் ( காலை 9 மணிதொடக்கம் 12 வரை / மாலை 2 „ 5 „ )

T:t 28 11-7—10-10-47. S. சார்ல்ஸ்பத்திரானு.


## தேகவியோகம்

### த வேலாயுதபிள்ளை

யாழ்ப்பாணஞ் சைவப்பிரகாசயந்திரசாலையில் பலவருட காலமாக "போர்மன்"க் கடமை யாற்றிய திரு. த. வேலாயுதபிள்ளை சிலகாலமாகத் தம்மைப் பீடித்த நோய் காரணமாகச் சென்ற திங்கட்கிழமை கோண்டாவிலில் உள்ள தமதில்லத்திற்றானே தேகவியோகமாயினர். இவர் இறக்கும்போது வயசு 40. இவரைப் பிரிந்து துயருறும் மனைவி மக்கள் சுற்றந்தாருடன் நாமும் அநுதாப முறுகின்றோம். இவரது ஆன்மா சாந்தியடைக.

## தனித்தமிழ்ப் பரீட்சைத்தேர்ச்சி

மதுரைத்தமிழ்ச் சங்கத்தார் விய வருஷம் பங்குனி மாதம் 25, 26, 27 (1947ம் வருஷம் ஏப்ரில் மாதம் 7, 8, 9) ஆம் தேதிகளில நடத்திய தனித்தமிழ்ப் பரீட்சைகளில் தேறி யோக்கியதா பத்திரம் பெறும் மாணாக்கர்களின் விபரம் வருமாறு:

பண்டித டரீக்ஷை
2-வது வகுப்பு

வே. காந்தி மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை மதுரை, வித்வான் ப. முடிசூடும் பெருமாள், தமிழாசிரியர், செண்ட் பிரான்சிஸ் ஸேவியர் ஹைஸ்கூல், தூத்துக்குடி. ஆ. சதாசிவம் ஆராலிதெற்கு வட்டுக்கோட்டை இலங்கை, வீ. அயோண்பிள்ளை, பிரின்ஸிபால் மாதர் ரெயினிங் காலேஜ் இளவாலை, தெல்லிப்பழை, இலங்கை

பாலபண்டித டரீக்ஷை
2-வது வகுப்பு

அ. ஆதிமூலம் மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை மதுரை, க. வெள்ளைச்சாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலை மதுரை S. திருமலை மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை மதுரை.

கடிகம்

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

பத்திராசிரியர் அவர்கட்கு
ஐயா,

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கம் என்னே? தமிழ்க்கலையை வளர்ப்பதா? அல்லது தமிழரின் மானத்தை விற்றுப் பணம் தேடுவதா? இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் விளம்பரத்தின் மூலம் * அதன் நோக்கத்தை ஊகித்து அறிந்து கொள்ளலாம். தமிழரின் பண்பாட்டுக்குத் தகுந்த விளம்பரம்! மனிதனின் கீழ்த்தரமான மிருக உணர்ச்சியைக் கிளப்பிப் பணஞ் சேகரிப்பதிலும் வாளாவிருத்தல் சாலவும் நன்று. மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே.

இக்களியாட்டத்தை தமிழரின் பண்பாட்டிற்கு ஏற்றவாறு நடாத்தியிருக்கலாமே; பல ஜாதியினரும் கூடும் கொழும்பு நகரில் நமது தமிழ் அன்னையின் பண்பாட்டையும், தமிழரின் கலைப்பண்பின் சிறப்பையும் சகலரும் கண்டு களிக்கும்படி செய்வித்திருக்கலாம்; ஆனால் நடந்தது என்னே!

இந்த மேல்நாட்டு நாகரிக தாஸர்களிடமிருந்து தமிழ் அன்னை விடுதலை அடையும் நாள் என்றுளோ?

இதைப்பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை 'இந்துசாதன' வாசகர்கள் அறிய விரும்புகிறோம்;

இங்ஙனம்
நா. கந்தையா

* இவ்விளம்பரம் இதில் இடம்பெறவில்லை. மன்மதன் போட்டி, ரதிப் போட்டி என்பன உட்படவுள்ள பல "களியாட்டங்கள்' இத்தமிழ்ச்சங்கக் களியாட்ட விழாவில் உண்டு என்று அவ் விளம்பரம் கூறுகிறது.

பிரவேச டரீக்ஷை
2-வது வகுப்பு

P. ஸ்ரீநிவாஸன், மதுரைத் தமிழ்ச் சங்கக்கலாசாலை மதுரை, அண அண்ணாமலை, கதிரேசன் கழகம், நாதநாதபுரம் காரைக்குடி, இராமநாதபுரம் ஜில்லா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விள் ட்ரஸற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ வங்கி

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பைய நகரமண்டபம்)

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-242,ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

( Std.12 2-8—31 7-47) (F)



# இப்பொழுது எங்கள் கைவச முள்ளன!

| | |
|---|---|
| சுத்தமான "பிறேக்" எண்ணெய் | டுக்கோஸ பிறே வர்ணங்கள் |
| ஸிமொனி ஸ்பொலிஷ் | "சைக்கிள்"கள் |
| ஹோர்-பல்ப்ஸ் | சைக்கிள்களிக்கு தேவையான தனிப்பொருள்கள் |
| குட்ஸ்யர் வான்-பெல்ற்ஸ (FanBelts) | றேடியோக்கள் |
| மின்சாரப் பொருள்கள் | ரயர் ரியூப்கள் |

**T. N. லிங்கம் & ஸன்,**

எவ்வகையான மோட்டார் வண்டிகளுக்கும் சைக்கிள்களுக்கும் தேவையான பொருள்களும் தனிப் பொருள்களும் கொடுப்பவர்கள்; மின்சாரப் பகுதிக் கன்ருக்ரர்கள்.

டெலிபோன் இல. *108.*
*248, K. K. S* யாழ்ப்பாணம்.
*19-6-47* Std *23* *24-6-47—22-7-47.*



# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். ரூ. ச. | வெளியூர். ரூ ச. | மலாய்நாட்டுக்கு ரூ. ச |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மனேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


உ
குகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்
ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்

# திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தோன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந்தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக்கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம, மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள்அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கொங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டி யிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்"

இங்ஙனம்,
குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக் குருக்கள்.

Std 26—1.7-47 30 9-47


# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to , 1—4 - 48



# தந்தரோக சஞ்சீவி

## கந்தசாமி வைத்தியர் சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியம்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 (வெ)


# அன்பு நெறி

1-ம் பக்கத் தொடர்ச்சி

வனே அபேதவாதியாவான்; அவனே சமதர்மியாவான். நான் தென்னாபிரிக்காவில் இருந்த காலத்தில் அத்தகைய ஓர்சேவையை ஆற்றினேன், அதுபோன்ற சேவையே நீங்களும் செய்யவேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.எவனொருவன் ஹிருதய சுத்தியுடையவனு யிருக்கின்ருனே அவன் உண்மையான சமதர்மியும அபேதவாதியுமாவான்.

"உலகிலே எல்லாரும் தம்மை அபேதவாதிகள் எனவும், சமதர்மிகள் எனவும் கூறிக்கொள்ளலாம். ஆனல், இவர்களில்எத்தனைபேர் உண்மையான தியாகசிந்தைகொண்டு தங்கள் பொருள் பண்டங்களைப் பொதுஜன சேவைக்காகத் தியாகம் செய்தவர்கள்? இவர்களில் எத்தனையோபேர செல்வத்திற் புரண்டு, அதனுற் கிடைக்கும் போகங்களில் திளைத்து வருகிருர்கள்,

'ஜனங்களைச் சமதர்மிகளாக்க வேண்டுமானல், நாம் எம் வாழ்க்கையினல், முதலில் வழிகாட்டவேண்டும். ஆள்பவனரயும் ஆளப்படுபவரையும் நாம் சமநிலையில் வைக்கவேண்டுமானல், அதனை எப்படிச் சாதிக்கலாம? ஒன்றில் அகிம்சா முறையைப் பின்பற்றி, அன்பின்வழிநால் ஆளும் அரசனைச் சமதர்மியாக்க வேண்டும்; அல்லது அவனை ஹிம்சித்து அழிக்க வேண்டும். ஆனல் இரண்டாவதுவழி மூர்க்கத்தனமானது; மிருகத்தனமானது. மனிதன் தெய்வீக சகதியுடையவன்; அவன் இந்தவழியிற் பிரவேசிக்கக்கூடாது. அன்பின்மூலமாகவே ஆளுவோனின் மனத்தைத் திருப்ப வேண்டும்."

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, July, 11, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org